6. தகவல் கோரல்

பரமக்குடி, போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்தோர் குடும்பத்திற்குக் கூடுதல் நிவாரணத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னால் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலே மாவீரன் விக்டர் இம்மானுவேலின் குருபூஜை நிகழ்ச்சியின்போது நடந்த அசம்பாவிதங்களினால் துர்பாக்கியவசமாக நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் சிலர் பலியானார்களென்பது ஒரு வருத்தத்திற்குரிய, வேதனைக்குரிய நிகழ்வு. இதைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்றும், அரசு அந்த நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரவும், சமூக நல்லிணக்கத்தை உருவாக்கவும், சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றாலும், மக்களும் அதிலே பங்கேற்கிற வகையிலே அமைதிக் குழுக்களை உருவாக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழராக, அவர்களுக்கு உதவி புரிவதிலே தன்னிகரற்ற முதலமைச்சராக விளங்குகிற அவர்கள், இதுகுறித்து (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்குமுன்பு பரமக்குடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தது குறித்து இந்த அரசும் மிகுந்த வருத்தம் அடைந்திருக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. ஏற்கெனவே எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் நீதி விசாரணை வேண்டுமென்று கோரினார்கள். அவர்களுடைய வேண்டுகோளையேற்று, அவர்களுடைய கோரிக்கையையேற்றுக் கொண்டுதான், உயர்*

நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்று நான் அறிவித்தேன். அதன்பின்னர், ஏற்கெனவே உயிரிழந்தவர்களின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அறிவிக்கப்பட்ட 1 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை இன்னும் அதிகப்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைத்தபின்னர், ஏற்கெனவே வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையை இன்னும் உயர்த்தித் தரவேண்டுமென்றால், அந்த விசாரணைக் கமிஷன்தான் பரிந்துரை செய்யவேண்டும். ஆகவே, விசாரணைக் கமிஷன் தன்னுடைய விசாரணையை முடித்து, அறிக்கை தரும்போது என்ன பரிந்துரை செய்கிறதோ, இன்னும் அதிகமாக அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்கவேண்டுமென்று அந்த அறிக்கையில் கூறப்பட்டால் நிச்சயமாக இந்த அரசு அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தும்.

முற்பகல் 10-15

அதைப்போலவே, இன்றுகூட இந்தப் பிரச்சினையை எழுப்ப முற்பட்ட சில மாண்புமிகு உறுப்பினர்கள், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டிருந்த சில காவல் துறை அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்; suspend செய்யவேண்டும் என்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காகத்தான் அவர்கள் வெளிநடப்பும் செய்திருக்கிறார்கள்.

ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கவில்லையென்றால் அது வேறு. நான் ஆரம்பத்தில் D.R.O. enquiry நடத்தப்படும் என்றுதான் அறிவித்தேன். ஏனென்றால் D.R.O. enquiry-இன் அறிக்கை உடனடியாகக் கிடைத்துவிடும், அதன்மீது உடனடியாக நாம் நடவடிக்கையை எடுக்கமுடியும். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள்தான், ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிஷன் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள்.

ஒரு விசாரணைக் கமிஷனையும் அமைத்துவிட்டு பின்னர் அரசு தன்னிச்சையாக நடவடிக்கையை எப்படி எடுக்க முடியும்? ஆகவே, விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டிருப்பதால், அந்த விசாரணைக் கமிஷனுக்குத் தலைமை ஏற்றிருக்கிற நீதிபதி,